# மீன்பிடிக்கான கட்டுப்பாடுகளை அரசு தளர்த்தாது?


விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 2 இதழ் 346
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16-1-1995



பொது சன நூலகம் மாநகராட்சி 16-1-1995


[கொழும்பு]

வடபகுதி கடலில் மீன்பிடித்தல் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த அரசு மறுத்துள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டதுபோல் இல்லாமல் வடபகுதியில் மீன்பிடிப்பதற்கு அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இது குறித்து 3ம் கட்ட பேச்சில் விடுதலைப் புலிகள் அரச தரப்பினரிடம் கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

★ சில பொருட்கள் மீதான

## பொருளாதாரத் தடை நாளை நீக்கப்படலாம்

(கொழும்பு)

20 பொருட்கள் மீதான தடையை அரசு நாளை செவ்வாய்க்கிழமை முதல் நீக்குமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் நேற்று தெரிவித்தன.

3ம் கட்டப் பேச்சுக்களின் போது முற்றான பொருளாதாரத் தடை நீக்கத்தை புலிகள்வலியுறுத்தியபோது ஆயுத தளபாடம், வெடிப்பொருள்கள், பெற்றோல், டீசல் யூரியா உட்பட ஏழு பொருட்களை தவிர 22 பொருட்கள் மீதான

(4-ம பக்கம் பார்க்க)

★ மோதல் தவிர்ப்பு குறித்து விளக்க

# வடபகுதி படை முகாம்களுக்கு இராணுவ தளபதி திடீர் விஜயம்!

## - படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் -

[கொழும்பு]

இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டீ சில்வா நேற்று முன்தினம் வடபகுதியில் உள்ள பல படை முகாம்களுக்கு திடீர் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து படையினர்க்கு விளக்கமளிக்குமுகமாகவே இவர் வடபகுதிமுகாம்களுக்கு விஜயம் செய்ததாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலி, காரைநகர், ஊர்காவற்றுறை, பூநகரி ஆகிய படை முகாம்களுக்கு விஜயம்

(4ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோரை மீளக் குடியேற்ற வேண்டும்

— சந்திரிகா தமிழில் வாழ்த்து —

(கொழும்பு)

இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினியில் நேற்று தமிழில் வழங்கிய பொங்கல்

(4ம் பக்கம் பார்கக)

புலிகள் வற்புறுத்தும்

## சில பிரச்னைக்கு தீர்வின்றேல் பேச்சு விரைவில் நடைபெறுது

(கொழும்பு)

அரச தரப்பினரிடம் விடுதலைப்புலிகள் 3ம் கட்ட பேச்சில் வலியுறுத்தியுள்ள முக்கிய பிரச்னைகளுக்கு அடுத்த இரண்டு மூன்று தினங்களில் நல்லதொரு முடிவு காணத் தவறும் பட்சத்தில் அடுத்த கட்டப்பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் சாத்தியங்கள் குறைவே என ஏ. எவ். பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்க பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியில்அவர்மேலும் கூறுகையில்; மீன்பிடித்தலுக்கு அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளினாலும்சிலபிரச்னைகள் தோன்றியுள்ளது. இது என்ன முடிவைத்தரும் என்ற நிச்சயமற்றதொரு நிலை ஏற்பட்டுள்ளது.மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் படி வடக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

படைகளிலிருந்து

## 6,000 இராணுவம் தப்பியோட்டம்!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து இது வரையில் சுமார் 6 ஆயிரம் பேர் தப்பியோடிவிட்டதாக இராணுவ தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

தப்பியோடிய இராணுவ சிப்பாய்களை கைதுசெய்வது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

இத்தகையோரின் பெயர் விபரங்கள் ஏற்கனவே சகல

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் வற்புறுத்துவதை தீர்க்க முயலுவோம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் வற்புறுத்தப்பட்டு வரும் விடயங்களுக்கு அரசு சாதகமான பதிலை அளிக்க முயலுமென அரசுத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் பி. பி. ஸிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

3ம் கட்டப் பேச்சுக்களில்

(4ம் பக்கம் பார்க்க)

## இட்டு மற்றும் 10 வேங்கைகளின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் தீருவிலில் நடைபெறவுள்ளது.

இன்று பி. பகல் 4-00 மணிக்கு உடுப்பிட்டிச் சந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு

## நிரந்தரத்தீர்வு காண்பதில் தாமதம் ஏற்படலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 3ம் கட்ட பேச்சுவார்த்தைகளில் எவ்வித முடிவும் எடுக்கப்படாதது இனப்பிரச்னை தீர்வில் நிரந்தர அமைதி ஏற்படுத்துவதனை தாமதப்படுத்தலாம் என வெரித்தாஸ் வானொலி நேற்று தெரிவித்தது.

வெரித்தாஸ் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை எப்போது ஆரம்பிக்க வேண்டும் என்பது குறித்த தீர்மானத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு நாட்கள் கிளாலி படகுசேவை

### காலை, மாலை நடைபெறும்

(யாழ்ப்பாணம்]

கிளாலி படகு சேவை நாளை செவ்வாய்க்கிழமை முதல், வாரத்தில் நான்கு நாட்கள் காலை மாலை சேவையாக நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**FOR SALE**

Good condition piano Monington & weston England one owner. T. Ganeshan, Piano Tuner 4th Mile Post, Main street, Manipay. C 1372

''றபர் சீல்''

''றபர் சீல்'' செய்வதில் அனுபவமுடையவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்: செல்வம் ஆட்ஸ், சுன்னுகம். (சி-1375)

25-3-95 வரை

செவ்வாய் வக்கிரம்

புத்தாண்டுப் பலன்கள் ரூ. 10/- (நூலாசிரியர்- சத்யா) எங்கும் கிடைக்கும். பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகளுக்கு சுரேகா புத்தக நிலையம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-1374)

## வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1373)

## கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

தாவடி அருள்மிகு அம்பலவாண வேத விநாயகர் ஆலய கும்பாபிஷேம் நாளை 17ம் திகதி நடைபெறவுள்ளது.

திரு. செ. சத்தியமூர்த்தியின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ரி

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

---

களம் பல கண்டு வெற்றிக்கொடி நாட்டிய வெற்றித் திருமகனே!

உனது இழப்பால் அல்லல்படுகிறோம்

இரண்டாம் ஆண்டு நினைவாக..........

## லிங்கம் குளிர்களி நிலையம்

[லிங்கம் கூல்பார்]

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

(ஏ-4701)

---

## பகுதி நேரப் பேணுநர்கள் தேவை

[பெண்கள்]

(1) கைக்குழந்தைகளைப் பேணுவோர்:

(2) 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பேணுவோர்:

பிள்ளைகளைப் பேணுவதில் அனுபவம் மிக்கவர்கள் தேவை

தாதிய சேவையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 23 வயதிற்கு மேற்பட்டோர்

உரிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்.

நிரந்தர வேலைவாய்ப்பைப் பெறுவோர் சேமலாப நிதி பெறுவதற்கு உரித்துடையவராவார்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-01-1995

அனுப்ப வேண்டிய முகவரி:

விளம்பர இல: எ 4695
மே/பா ஈழநாடு
சிவன்கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

— நிர்வாகம்
செஞ்சோலை

(எ 4695)

---

உதவி மருத்துவ சேவையாளர் (AMP)

## கற்கை நெறிக்கான விண்ணப்பம்

மேற்படி கற்கை நெறியின் 1995-ம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகளும் பயிற்சி நெறிகளும் தமிழீழ மருத்துவக் கல்லூரியில் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் தகுதி வாய்ந்த மாணவர்களிடம் இருந்து அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

தகைமை:

1. க, பொ. த. (உ/த) உயிரியல் பிரிவில் (BIOLOGY) சித்தி
2. க. பொ. த. (சா/த) ஆங்கிலத்தில் சித்தி

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்திற்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டு 31-01-1995 க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| பொறுப்பாளர் | | பொறுப்பாளர் |
|---|---|---|
| கல்விப்பகுதி, | | கல்விப்பகுதி, |
| விடுதலைப்புலிகள் | அ | விடுதலைப்புலிகள் |
| மருத்துவப் பிரிவு, | ல் | மருத்துவப் பிரிவு, |
| நடுவப்பணியகம், | ல | கிளை நடுவப்பணியகம், |
| சுண்டுக்குளி, | து | திருநகர், |
| யாழ்ப்பாணம். | | கிளிநொச்சி. |

### மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முழுப்பெயர்:
02. பிறந்த திகதி:
03. தற்போதைய முகவரி:
04. நிரந்தர முகவரி:
05. பரீட்சை பெறுபேறுகள்:

1. க. பொ. த. (உ/த) உயிரியல்
(கூடிய புள்ளி பெற்ற தேர்வு விபரம்)
(அ) பரீட்சைக்கு தோற்றிய இடம்:
(ஆ) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு:
(இ) பெற்ற மொத்தப் புள்ளி:
(ஈ) பெறுபேறு:

| இல | பாடம் | நிலை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

2. க. பொ. த. (சா/த) ஆங்கிலம்

| ஆண்டு | நிலை |
|---|---|
| | |

மேற்கூறிய விபரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

............ திகதி

............................ விண்ணப்பதாரியின் ஒப்பம்

(எ 4699)

---

வங்கக் கடலில் வீரகாவியம் படைத்த கேணல் ''கிட்டு மாமா'' உட்பட பத்து மாவீரர்களின் 2ம் ஆண்டு நினைவுநாளில் எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.



## கண்ணன் லொட்ஜ்

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

(எ:4700)

### மணிவாக்கு

பொறுமை முழுவதையும் ஆரம்பத்திலேயே கழுத்தை நெரித்து அழித்திடவேண்டும். இல்லையெனில் அது வலிமையடைந்து உண்மையை வென்றுவிடும்.

-டேவனன்ட்

# படைக்குதுப்பாக்கிவாங்குவது அழகு பார்ப்பதற்காக அல்ல

## — ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்துக்கு துப்பாக்கி வழங்குவது அழகு பார்ப்பதற்காக அல்ல. பயந்து நடுங்கும் ஒருவனால் நாட்டை ஒருபோதும் ஆளமுடியாது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பைப் பற்றி விமர்சிப்பவர்களும் அடிக்கடி அவற்றை மாற்றம் செய்பவர்களும் மூளை குழம்பியவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் தேர்தல் தோல்வியை பற்றி நான் பேச விரும்பவில்லை. நான் தேர்தலில் பங்குபற்றியிருந்தால் தோல்வியடைந்திருக்கமாட்டேன். இப்போதைய அரசைப் பற்றி நான் விமர்சிக்க விரும்பவில்லை என்றும் திரு. ஜெயவர்த்தன கருத்து வெளியிட்டதாக லங்காதீப என்ற சிங்களப்பத்திரிகையை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் தமிழ் சேவை தெரிவித்தது.

-இ-ரி

## இராசி பலன்

16-1-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 02)

பூரணை பி.இ. 2-37 வரை, புனர்பூசல் பி. இ. 4-26 வரை அமிர்தசித்தயோகம், பூரணை விரதம், கரிநாள், இராகு காலம் காலை 8-04 முதல் 9-34 வரை, சுபநேரம் ந. ப. 12-34 முதல் 2-04 வரை.

மேடம்: தொழில் விரோதம், கவனக் குறைவு, அலைச்சல்.

இடபம்: புதிய ஸ்தானம், நண்பர் மகிழ்ச்சி. பணவரவு.

மிதுனம்: கடும் உழைப்பு குடும்ப கவலை, பணமுடை.

கடகம்: பொதுப்பணி, அதிகாரிகள் பாராட்டு, சுப விரயம்.

சிங்கம்: இனசன விரோதம், கடன்பயம், தந்திரோபாயம்.

கன்னி; குடும்பசுகம், பிரச்னைக்கு தீர்வு, மனமகிழ்ச்சி.

துலாம்: விரோதிகளை ஜெயித்தல், குழந்தைப்பாசம், பயணம்.

விருச்சிகம்: போட்டி தவிர்ப்பு, மனக் கவலை. கடும் சினம்.

தனுசு: ஒதுங்கிப்போதல், மனவேதனை, ஏழ்மை நிலை,

மகரம்: தொழில் லாபம், உறவினர் பெருமை, தெய்வீகச் செலவு.

கும்பம்: இல்லச் சிறப்பு. புத்திரர் உதவி, உல்லாசம்,

மீனம்: பிறர்வன்மம், உடல் உபாதை, கருத்துமுரண்பாடு.

ஜோஸ்யர்

# காணாமல்போனோர் பற்றிய விசாரணை விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் அலுவலகம் கொழும்பு மேல் நீதிமன்றத் தொகுதியில் இருக்கும் நீதி அமைச்சில் செயல்படும் விசாரணைகள் விரைவில் ஆராயப்படும்.

மேற்கு, தெற்கு சப்ரகமுவ மாகாணங்களுக்கான ஆணைக் குழு கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் விசாரணைகளை நடத்தவிருக்கிறது.

இந்த மூன்று ஆணைக்குழுக்களுக்கும் எழுத்து மூலமான கருத்துக்களை அடுத்த மாதம் 14-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும்.

சகல தஸ்தாவேஜுகளும் இரகசியமாகவே கருதப்படும். கடத்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்கும் இந்த சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர்களை இனம் காண்பதற்கும் ஆணைக் குழுக்கள் இந்த விபரங்களைப் பயன்படுத்தும்.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடைபெறுவதைத் தடுப்பதற்கு ஆணைக்குழுக்கள் சிபார்சு செய்யும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது பற்றியும் இந்தக் குழுக்கள் பரிந்துரைக்கவிருக்கின்றன.

-இ-ரி

## நமது நோக்கு

### அச்சம் போக்க வேண்டும்

மூன்றும் கட்டப் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு நன்மை தரவில்லை என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

புனர்நிர்மாணப் பணிகள், மோதல் தவிர்ப்பு சில பொருட்கள் மீதான தடைநீக்கம் ஆகிய விடயங்களில் முன்னேற்றகரமான கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டது கவனிக்கத்தக்கது.

ஆனால் சுமுகமான பேச்சுவார்த்தைகள் தொடருவதற்குத் தடையாக இருப்பது எது?

குடாநாட்டிற்கான பாதுகாப்பான பாதை திறப்பதிலேயே முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளன.

இது யாரால் ஏன் என்பது பற்றி விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

மக்களின் போக்குவரத்து சுதந்திரமாக அமையவேண்டும். பாதுகாப்பானதாக அமைய வேண்டும்; விரும்பிய பொருட்களை விரும்பிய இடத்திறகு எடுத்துச் செல்வவற்கான வாய்ப்புகள் இருக்கவேண்டும்.

ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாக இருக்கிறதா?

படைமுகாம்கள் அமைத்து பயணிகளைச் சோதனையிடும் போது தாம் கைது செய்யப்படுவோமோ என்ற அச்ச உணர்வு ஏற்படுவது நியாயமே!

கடந்த காலத்தில் இத்தகைய படைமுகாம்கள் அமைந்த இடங்களில் கைது செய்யப்பட்டது மாத்திரமல்ல சித்திர வதைக்குட்பட்டதையும், காணமற் போனதையும் மக்கள் மறக்கவில்லை.

இராணுவத்தினர் பாதை விவகாரத்தில் கூறும் காரணங்களையும் எடுக்கும் நடவடிக்கைகளையும் பார்க்கும் போது ஆக்கிரமிப்புச் சிந்தனையிலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை.

இதனால் தமிழ் மக்கள் தாம் நிரந்தரமாகவே நசுக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்ச உணர்வு தொடர்கிறது.

புனர்நிர்மாணப் பணிகள் சீராக நடைபெற வேண்டுமாயின் பாதை திறக்கப்படவேண்டியதும் அவசியம்.

எனவே மக்களின் அச்ச உணர்வைப் போக்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அரசின் கடமை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்

## உள்ளூராட்சித் தேர்தல் ஜூன் மாதம் நடைபெறும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள எட்டு மாகாணங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடத்தப்படும்.

1994ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களின்படி இந்தத் தேர்தல் நடத்தப்படும்,

வடக்கு, வடமத்தி, மத்திய ஊவா, தெற்கு வடமேல் சப்ரகமுவ மேல் மாகாணங்களுக்கான உள்ளூராட்சி தேர்தல்கள் 1989 ஜூன் மாதம் நடத்தப்பட்டன எதிர்வரும் ஜூன் மாதத்துடன் இச்சபைகள் காலாவதியாகின்றன. கிழக்கு மாகாணத்திற்கான உள்ளூராட்சி தேர்தல் கடந்த வருடம் மார்ச் மாதம் நடத்தப்பட்டது. எனினும் அம்மாகாண தேர்தலையும் ஜூன் மாதம் நடத்த முடியும் என தெரிவிக்கப்பட்டது.

தற்போது 31 அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலும் பல கட்சிகள் பதிவுக்காக தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்துள்ளன.

கே-இ-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-16

திங்கள் இரவு

08-01 தளபதி கேணல் கிட்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி நாவண்ணன் எழுதிய ''காற்றும் கடலும்''
08-30 செய்திகள்
08-40 தரிசனம் திரைப்பட இயக்குநர் பொ. தாசன் அவர்களுடனான செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995-01-17

செவ்வாய் காலை

07-01 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகை செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-01-16

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
03-00 சிந்தனைக்கு சில வினாடிகள்
06-02 நேயர் நெஞ்சம் நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர் நல்லூர் சந்தையடியைச்சேர்ந்த திரு. ஈசன் அவர்கள்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## பலதும் பத்தும்

### காசாகும் கடிதங்கள்

1. வரலாறு: நேரு சிறையிலிருந்து மகள்இந்திராவிற்கு எழுதிய கடிதங்கள் 'உலக வரலாறு' என்ற நூலாகிப் பல பதிப்புகளைக் கண்டன.

2. அரசியல், அறிஞர் அண்ணா வாரம் தோறும் ''திராவிடநாடு''வார இதழில் தம்பிக்கு எனத் தலைப்பிட்டு எழுதிய கடிதங்கள் தூங்கிக்கிடந்த திராவிட இளைஞரைத் தட்டி எழுப்பின,

3. அறம்: டாக்டர் மு. வ. 'தம்பிக்கு' 'தங்கைக்கு' எனஎழுதி வெளியிட்டவை அறப்போதனைகளை அழகுறத் தெளிவாக்கின.

பி. கு: 19ம் நூற்றுண்டின் ஐரிஸ் நாடக ஆசிரியர் ஒஸ்வைல்ட் இலக்கியச்சுவையோடு காதலிக்குக் கடிதங்கள் எழுதினர். இன்று ஏல விற்பனையாளர் விற்றுக் காசாக்கி விட்டார்! வாங்கியவர் அச்சிடக்கூடாது என ஏங்குகிறார்கள் பெற்றோர்கள்.

— மயூரன்

**நாம் வாழ எம்மண்ணில் வளமுண்டு-ஏன் மண்டியிட வேண்டும் மாற்றானிடம்**

## மன்னவனே கிட்டண்ணா மறப்போமா

தமிழ்மக்கள் உரிமைகளை அபகரித்து
தமிழீழ மண்ணெல்லாம் கொள்ளையிட்டு
அமைதியினைச் சீர்குலைத்து அடித்தொடுக்கி
அடிமைகளாய் உருக்குலைத்த ஆட்சியினர்
திமிரடக்கத் திட்டமிட்ட தலைவனுக்கு
நிகரில்லாத் தளபதியாய் கைகொடுத்து
நிமிர்ந்தெழுந்து மறவர்வழி மானங்காத்த
மன்னவனே கிட்டண்ணா மறப்போமா

தமிழீழ மண்ணாட்சி கைக்கெடுத்து
தயங்காது நிர்வாக் கட்டமைப்பை
அமைதிக்காய் ஒழுங்கமைத்த கர்மவீரன்
அஞ்சாத நெஞ்சத்து ஆண்மையாளன்
எமக்கெந்த இடையூறும் நேராவண்ணம்
எஞ்ஞான்றும் துஞ்சாது விழித்திருந்து
அமைக்கின்ற தன்னாட்சிக் குறுதுணையாய்
அலைந்துலைந்த கிட்டண்ணா மறப்போமா

—மாரீசன்பிள்ளை

## நினைவெல்லாம் நிறைவீரா கிட்டு அண்ணனே!

ராகம்:- மோகனம் தாளம்:- ஆதி

பல்லவி

இணையில்லாப் பெருவீரா கிட்டு அண்ணனே [-எம்
நினைவெல்லாம் நிறைவீரா கிட்டுஅண்ணனே
—என்றும்
[இணை......]

அனுபல்லவி

உலகத்தில் உயிரொன்றே உயர்ந்ததென்னுவாய்
—அந்த
உயிருக்கும் உரிமைதான் சிறந்ததென்னுவாய்
—எங்கும்
[இணை......]

சரணம்

தமிழ்மானம் தனைக்காக்க உள்ளம் துணிந்தவா
—உயிர்த்
தமிழீழம் தனைமீட்கத் துள்ளியெழுந்தவா— செந்
தமிழ்மாட்சி தனைநாட்டப் பொங்கியெழுந்தவா
—நம்
தமிழாட்சி தனைக்காண நெஞ்சம் துணிந்தவா
—எம்
[இணை......]

சரவணன்

(வங்கக் கடலில் கேணல் கிட்டு உட்பட வீரச்சாவு எய்திய 10 வேங்கைகளின் நினைவு தினம் இன்றாகும்)

# அரசுக்குரிய பிரச்னையில் இராணுவம் தலையிடக்கூடாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப் பிரச்னைத் தீர்வானது ஓர் அரசியல் பிரச்னையாகும்.. இது அரசுக்குரிய பிரச்னையாகும். எனவே இராணுவத்தினர் இதில் தலையிடக்கூடாது.

இவ்வாறு 3 ம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க யாழ்ப்பாணம் வந்த பத்திரிகையாளர்கள் பலரும் தெரிவித்தனர். அவர்கள் இது பற்றி மேலும் கூறுகையில்:

இனப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வே பரிகாரம் எனக் கூறிவந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசை நிராகரித்த மக்கள், இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படும் எனக் கூறிய சந்திரிகாவை ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளனர். இதன் மூலம் இப்பிரச்னையானது, அரசியல் ரீதியாகப் புலிகளுடன் பேசித் தீர்க்கப்படவேண்டும் என்பதனைப் புதிய அரசும், மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில் இப்பிரசனைக்குத் தடையாகப் படையினர் இருக்கக்கூடாது.

கடந்த கால யுத்தம் மூலம் படையினர் களைத்துவிட்டனர். இதனால் அவர்கள் தொடர்ந்தும் போரிட முடியாத நிலையில் உள்ளனர். பெருமளவு படையினர் இப்பிரச்னையைச் சமாதானமான முறையில் தீர்க்கப்படுவதையே விரும்புகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர். -சி

## இடம்பெயர்ந்தோரை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்;

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளோம். சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்தவேண்டும் என்ற எனது அவாவின் முக்கிய நடவடிக்கை இதுவாகும்,

இந்த வேளையில் நாம் அனைவரும் பயத்தையும், அவநம்பிக்கையையும் கைவிடவேண்டும். ஐக்கியம், புரிந்துணர்வு வளர்க்கப்படவேண்டும்.

இத்தகைய மகிழ்ச்சியான பொங்கல் தினத்தில் எமது உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக்கொள்வோம். அழிந்து போன எமது சொத்துக்களை மீண்டும் கட்டி எழுப்பவேண்டும். வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை மன உறுதி ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாண்டில் புதிய எதிர் காலத்தைத் தோற்றுவிப்பதுடன், சிங்களவர், தமிழர், முஸ்லிம் வர்க்கம் அனைவருக்கும் ஏற்றதான அமைதியான, சுபிட்சமான மகிழ்ச்சி பொங்கும் நாடு ஒன்றை உருவாக்க இந்த வேளையில் உறுதி கொள்வோம் என்றார். ம-சி

## நான்கு நாட்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் காலை 8-00 மணி முதல் காலை 10-00 மணிவரையும் மாலை 4-00 மணி முதல் இரவு 8-00 மணி வரையும் இப்படகு சேவை நடைபெறும். திங்கள்' வியாழன், ஞாயிறு ஆகிய கிழமைகளில் இப்படகுச் சேவை நடைபெறுது.

18-ம் திகதி புதன்கிழமை வழமையான படகுசேவை நடைபெறமாட்டாது. அன்றையதினம் பாப்பரசரை தரிசிக்கச் செல்கின்ற மக்களிற்காக மட்டும் விஷேட படகு சேவை காலை 8-00 மணி முதல் நடைபெறும்.

இதேவேளை படகு சேவை நடைபெறும் நான்கு நாட்களில் ஏதாவது தினத்தில் படகு சேவை நடைபெறமாட்டாது என்றால் மாத்திரமே அது பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி]

# பலாலி, வெற்றிலைக்கேணியில் 2 இராணுவம் பலி

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாம் மற்றும் வெற்றிலைக்கேணி முகாம் ஆகியவற்றில் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில், இரு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமினுள் இராணுவத்தினர் வைத்திருந்த கைக்குண்டு தவறுதலாக வெடித்ததாலும், பலாலியில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலுமே இந்த இரு இராணுவத்தினரும் உயிரிழந்தனராம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## கிட்டு மற்றும்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

யில்'இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். முதலில் கடற்புலிகளின் அணிவகுப்பும். தொடர்ந்து காவல்துறையினரின் அணிவகுப்பும்: மாணவர் அமைப்பினரின் அணிவகுப்பும், போராளிகளும், பொதுமக்களும் ஊர்வலமாக தீருவில் நினைவாலயத்தை மாலை 5-00 மணிக்கு சென்றடைவர்.

இதனைத் தொடர்ந்து பொது ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஏற்றிவைப்பார். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா ஏற்றுவார். நினைவுக் கல்லிற்கான ஈகச்சுடரை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை ஏற்றி வைப்பார். நினைவுக் கல்லிற்கான மாலையை கேணல் கிட்டுவின் தாயார் திருமதி சதாசிவம் அணிவிப்பார். இதனைத் தொடர்ந்து இவ் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு இவர்களின் பெற்றோர், உரித்துடையோர் சுடர் ஏற்றி, மாலை அணிவிப்பர்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகும். இதில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா, நடேசன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்கள் இதனைத் தொடர்ந்து தமிழீழ இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் விடுதலைப் புலிகள் கலை ப. கழகத்தினரின் மரணத்தை வென்றவர்கள் நாடகம் நடைபெறும்.

இதேவேளை கேணல் கிட்டு மற்றும் விடுதலைப்புலி மாவீரர்களினதும் 2-ம் ஆண்டு நினைவு தினம் இன்று தமிழ் ஈழ மக்களால் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி தமிழீத்தின் மூலை முடுக்கெல்லாம் பதாகைகள் கட்டப்பட்டதுடன் வீடுகள், நூல்நிலையங்கள் மற்றும் பொதுஅமைப்புகளிலும் கேர்ணல் கிட்டு மற்றும் 9 மாவீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி ரெலுத்தப்படுகிறது.

இன்று காலை 9-00 மணிக்கு கேணல் கிட்டுவினதும் மற்றும் 9 மாவீரர்களினதும் உருவய் படங்களுக்கு மலர் சூட்டி தீபமேற்றி தமிழீமக்கள் அஞ்சலி செலுத்துவர். [சி)

## சில பொருட்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடையை நீக்க அரசு பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

தற்போது 20 பொருட்கள் மீதான தடையை அரசு பெரும்பாலும் நாளை முதல் நீக்குமெனஎதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. (சி)

## மீன்பிடிக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி ஆராய்வதாகவும் அரச குழுவினர் கூறியுள்ளனர் எனினும் இக்கட்டுப்பாடுகளை தளர்த்த அரசு மறுப்புத் தெரிவித்துள்ளதாக 'வெரித்தாஸ்' நேறறு தெரிவித்தது.

இதேவேளை ஆனையிறவு முகாமையும் மூட அரசு மறுத்துள்ளதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது. (சி)

மோதல் தவிர்ப்பு காலத்தில்

# காப்பரண்களை புலிகள் அமைக்கவில்லை

[கொழும்பு]

மோதல் தவிர்ப்பு காலத்தில் விடுதலைப் புலிகள் காப்பரண்களை அமைத்து தம்மை பலப்படுத்தி வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளை அரச பிரதிநிதிகள் குழு நிராகரித்துள்ளது.

இத்தகைய வதந்திகளில் எதுவித உண்மையுமில்லை என புலிகளுடனான 3ம் கட்டப் பேச்சுக்களைமுடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு திரும்பிய அரச பிரதிநிதிகள் குழுவினர் தெரிவித்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது,

மோதல் தவிர்ப்பு காலத்தில் விடுதலைப் புலிகள் தம்மை பலப்படுத்தும் விதத்தில் காவலரண்களை அமைத்து வருவதாக சில கொழும்பு பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே. (சி)

கண்முன்னே உன்னை அழித்து விட்டார்களே
தலைவா!
உன் வீரகாவியம் ஈழத்தில் முரசொலிக்குமடா

கேணல் கிட்டுவுக்கும் மற்றும் ஒன்பது
மாவீரர்களுக்கும் எமது 2-ம் ஆண்டு
அஞ்சலி

**திருமாட்டி**
**புடைவைக்கடல்**
122, மின்சார நிலையவீதி' [மேல்மாடி]
யாழ்ப்பாணம்.
(ஏ-4702)

## படைகளிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தப்பியோடும் இராணுவத்தினர் கொள்ளை முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருவதாகவும், இது தொடர்பான முறைப்பாடுகள் சகல பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. க-சி

## இனப்பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பதில் இருதரப்பும் தவறி விட்டதாகவும் தெரிவித்தது.

மேலும் நடைபெற்று முடிந்த இப்பேச்சுவார்த்தையின் போது சில முக்கிய பிரச்னைகள் தொடர்பாக உடன்பாடுகாணப்படாததால் இந்நிலையில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தடைப்படும் அபாயம் எழுந்துள்ளதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது. க-சி

## மோதல் தவிர்ப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த ஜெரி டி சில்வா படை அதிகாரிகளுடனும் சிப்பாய்களுடனும் மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்து கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு தொடர்ந்தும் இரு தரப்பினராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாதவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## புலிகள் வற்புறுத்துவதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முட்டுக்கட்டை நிலை தோன்றி உள்ளதைத் தொடர்ந்தே அரசுத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள், சமாதானப் பேச்சுக்கள் குறித்து அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை அடுத்த கட்ட பேச்சுக்கான திகதி குறிப்பிடப்படுவதில் ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது என பி. பி. ஸி.முகவர்ஜனாதிபதியின் செயலர் திரு. பலபத்தபென்டியிடம் நேற்று கேட்டபோது:

அடுத்த கட்டபேச்சுக்கு திகதி குறிப்பிடுவதற்கு முன் நாங்கள் சில பிரச்னைகள் குறித்து ஒரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது. ஏனென்றால் அவை சில வேலைத் திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தாமதங்களை ஏற்படுத்துகின்றன. நாம் உடனடியாக வடபகுதியில் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. தற்போது இவையே பேச்சுக்களில் முன்னுரிமை பெறுகின்றன. அடுத்த கட்டபேச்சக்கான திகதி இதை தொடர்ந்து வரும். -சி

## சில பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் மீன் பிடித்தலுக்கு கட்டுப்பாடு எதுவும் இல்லை, என புலிகள் வலியுறுத்தியுள்ளனர். ஆனால் அரசோ இதற்கு சில கட்டுப்பாடுகளை போட்டுள்ளது. இது புலிகளுக்கு ஏற்புடையதாக அமையவில்லை.

இதேபோல் வேறுசில முக்கிய விடயங்களிலும் இருதரப்பும் உடன்பாட்டிற்கு வரவில்லை அரசியல் தீர்வுதொடர்பாக உண்மையான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன் இப்படியான சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டும் அடுத்த 2 அல்லது மூன்று நாட்களுக்குள் இது தீர்க்கப்படாவிடில் மிக விரைவில் பேச்சுக்கள் நடப்பதற்கான சாத்தியங்கள்இல்லை.

அரசு அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்களை நடாத்துவதில் ஆர்வம் காட்டுகிறது. புலிகளோ பொருளாதாரப் பிரச்னை (அன்றாட பிரச்னை) பற்றி பேசுவதில் ஆர்வமாயுள்ளனர். வடக்கு-கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியும், புனர் அமைப்பும் முதலில் மேற்கொள்ளவேண்டுமென புலிகள் வற்புறுத்துகிறார்கள். அரசோ பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கையும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சும் ஒரே நேரத்தில் நடைபெறவேண்டும் என விரும்புகிறது. இதனால் இரு வேறு கருத்துக்கள் நிலவுகிறது. எனவே இதன் பலாபலன்கள் பெரும் நன்மையானதாக அமையுமென நினைக்கவில்லை எனவும் கூறினார், (சி)

களப்பலியான கிட்டண்ணுவுக்கும்
மற்றும்
ஒன்பது மாவீரர்களுக்கும் எமது
2-ம் ஆண்டு அஞ்சலி

**நதியா**
**நகைமாடம்**
02, சந்தோஷம் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-4703)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-